**DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT, VEPPANTHATTAI**

**PRESENT: THIRU.R.RAJASEKARAN, L.L.M.,**
**District Munsif Cum Judicial Magistrate,**
**Kunnam.**
**(FAC) District Munsif Cum Judicial Magistrate,**
**Veppanthattai.**

**CASE SUMMARY**

**CC. 127/2025, CNR NO.TNPB06-000657-2025**

| | | |
|---|---|---|
| 1. | The Period of remand of the accused | Accused were arrested on 07.04.2025 and released on 07.04.2025 at Station Bail |
| 2. | The date of filing of the complaint/final report in the court | 29.07.2025/ 08.09.2025 |
| 3. | The date of committal of the case to the Court of Session | NIL |
| 4. | The date of questioning of the accused u/s.228,240,246 and 251 of the Code of Criminal Procedure, 1973, as the case may be | 24.03.2026 |
| 5. | Filing of all miscellaneous petitions and their results including the results on challenge before superior courts; except routine petitions like petitions u/s.317 of the code | -- |
| 6. | Date of examination in chief and cross examination of a witness | PW1, PW2 Chief & Cross examined on 24.03.2026 |
| 7. | Date of examination of the accused u/s.313(1)(b) of Crpc | 26.03.2026 |
| 8. | Details of abscondence of an accused and his appearance/production, as the case may be; and | NIL |
| 9. | Grant of stay by superior courts and the results thereof | NIL |

(FAC) District Munsif Cum Judicial Magistrate,
Veppanthattai.

Date :30.03.2026 DM cum JM, Veppanthattai

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வேப்பந்தட்டை**

**முன்னிலை : திரு.இரா.இராஜசேகரன், எல்.எல்.எம்.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**குன்னம்.**
**(FAC) மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**வேப்பந்தட்டை.**

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30 ஆம் நாள் திங்கள்கிழமை
**2057** திருவள்ளுவர் ஆண்டு விசுவாவசு வருடம் பங்குனி மாதம் **16** ம் நாள்

ஆண்டுபட்டிகை வழக்கு எண்.**127/2025**

CNR NO.TNPB06-000657-2025

அரசுக்காக,
காவல் உதவி ஆய்வாளர்,
வி. களத்தூர் நிலையம்,
குற்ற எண்.44/2025 – குற்றமுறையீட்டாளர்.

/ எதிர் /

முத்தம்மாள் (63/2025)
க/பெ. பெரியசாமி
வாலிகண்டபுரம் ரோடு, மேட்டுபாளையம் கிராமம்
வேப்பந்தட்டை வட்டம், பெரம்பலூர் மாவட்டம். – எதிரி

இந்த வழக்கு கடந்த 30.07.2025 ஆம் தேதி கோப்புக்கு எடுக்கப்பட்டு, என் முன்னால் 26.03.2026 ஆம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்ததில், அரசு தரப்பில் திரு. S. சண்முகராஜா, அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை–2 அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு. P. திருஞானம், அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்களை கேட்டும் வழக்காவணங்களை பரிசீலித்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற சீரிய பரிசீலனையில் இருந்து, இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

## தீர்ப்புரை

**1) அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்** :

வி. களத்தூர் காவல் நிலைய சரகத்திற்கு உட்பட்ட கிராமத்தில் கடந்த 06.04.2025 ம் தேதி மதியம் சுமார் 16.30 மணிக்கு எதிரி மேட்டுபாளையத்தில் உள்ள அவரது வீட்டின் அருகே வைத்து சுமார் 180ML அளவுடன் கூடிய Black Pearl Brandy– 26 பாட்டில்களை அரசு அனுமதியின்றி சட்டத்திற்கு புறம்பாக அதிக லாபத்திற்கு விற்பனைக்காக வைத்துள்ளார். எனவே எதிரியின் மீது சட்ட பிரிவு 4(1)(C) AMENDMEND

TNP ACT 2024–ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக வி. களத்தூர் காவல் உதவி ஆய்வாளர் அவர்கள் எதிரி மீது குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2) பாரதிய நாகரிக் சுரக்சா சங்கிதா பிரிவு 230 ன் கீழ் நகல் வழங்குதல்:**

எதிரிக்கு இந்நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை அனுப்பப்பட்டு, எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானார். எதிரிக்கு அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் பாரதிய நாகரிக் சுரக்சா சங்கிதா பிரிவு 230 ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

**3) குற்றச்சாட்டு வனைந்து குற்றம் பற்றி வினவுதல்**

எதிரிக்கு போதுமான கால அவகாசம் அளித்து அதன் பின்னர் ஆவணங்களின் பரிசீலனையின் பேரில், எதிரியின் மீதான சட்டப் பிரிவு 4(1)(C) TNP (Amendment) Act, 2024–ன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து தமிழில் விளக்கி கூறி வினவியபோது, எதிரி தன் மீதான குற்றச்சாட்டை மறுத்து வழக்கு விசாரணை வேண்டினார். அதன் பின்னர் அரசு தரப்பு சாட்சிகளை விசாரிக்க சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்ப உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

**4) அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் விவரம்:**

அரசு தரப்பில் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகிய சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.3 ஆகிய சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிரி தரப்பில் சாட்சிகளோ சான்றாவணங்களோ குறியீடு செய்யப்படவில்லை.

**5) அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்தின் சுருக்கம்:**

5) (i) அரசு தரப்பில் முதல்நிலை காவலர் சுரேஷ் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். மேற்படி அ.சா.1 தனது நீதிமன்ற சாட்சியத்தில், கடந்த 06.04.2025 ம் தேதி மதுவிலக்கு தடுப்பு சம்மந்தமாக மேட்டுபாளையம் பகுதிகளில் ரெய்டு சென்றுக்கொண்டிருந்தபோது உதவி ஆய்வாளருக்கு கிடைத்த ரகசிய தகவலின்படி எதிரி முத்தம்மாள் வீட்டின் உள்ளே சென்று சோதனை செய்தபோது வீட்டினுள் 180 m.l. அளவுள்ள Block pearl பிராந்தி 26 மதுபாட்டில்கள் இருந்தது குறித்தும், எதிரியின் வீட்டிலிருந்து மேற்படி வழக்கு சொத்துகளை கைபற்றுதல் மகஜரில் கைபற்றியும் பின்னர் அந்த வழக்கு சொத்துகளை திறந்து கொட்டி அழித்தல்

மகஜரும் தயார் செய்யப்பட்டது குறித்தும், பின்னர் காவல் நிலைய குற்ற எண். 44/2025 சட்டப்பிரிவு 4(1)(C) TNP (Amendment) Act, 2024–ன் படி வழக்கு பதிவு செய்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தது குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார்.

5(ii) இவ்வழக்கின் உதவி ஆய்வாளர் அசோகன் என்பவர் அ.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அ.சா.2 தனது சாட்சியத்தில் அ.த.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது குறித்து சாட்சியம் அளித்துள்ளார். அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணை முடிக்கப்பட்டுள்ளது.

**6) பாரதிய நாகரிக் சுரக்சா சன்ஹிதா பிரிவு 351(1)(ஆ)வின் கீழ் வினவுதல் :**

அரசு தரப்பு சாட்சிகள் விசாரணை முடிந்த பின்னர், சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களில் எதிரிக்கு பாதகமான சங்கதிகளை விளக்கி கூறி பாரதிய நாகரிக் சுரக்சா சன்ஹிதா பிரிவு 351(1)(ஆ)வின் கீழ் விசாரித்த போது எதிரி சாட்சிகள் கூறியது பொய் என்று தெரிவித்துள்ளார். மேலும் எதிரி தனது தரப்பில் விசாரிக்க சாட்சியம் இல்லை என தெரிவித்தார்.

**7) அரசுத் தரப்பு வாதம்:**

கற்றறிந்த அரசு உதவி வழக்கறிஞர் நிலை 2, தனது வாதத்தின் போது, அரசு தரப்பு சாட்சிகள் எதிரிக்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதாலும், மேலும், சான்றாவணங்கள் அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.3 ஆகியவை குறியீடு செய்யப்பட்டுள்ளதாலும், எதிரி மீதான குற்றச்சாட்டு தெளிவாக நிரூபிக்கப்பட்டுள்ளது என்று அரசுத் தரப்பில் வாதம் வைக்கப்பட்டது.

**8) எதிரி தரப்பு வாதம் :**

கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞர் வாதிடும்போது, வழக்கின் புகார்தாரரும், இவ்வழக்கின் பதிவு செய்தவரும், சாட்சி கையொப்பம் செய்ததும் காவல் துறையினர் என்பதால், இவ்வழக்கில் புலன் விசாரணை ஒருதலைபட்டசாமாக மேற்கொள்ளப் பட்டுள்ளது என்றும், எதிரியிடம் அரசு மதுபானம் இருந்துள்ளது குறித்து, தனிப்பட்ட சாட்சிகள் மூலம் நிரூபிக்கப்பட்டவில்லை என்றும், தமிழ்நாடு மதுவிலக்கு சட்டம் பிரிவு 32ன் படி முறையான நடைமுறைகள் பின்பற்றப்படவில்லை என்றும், எனவே, அரசுத்தரப்பு நியாயமான சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு எதிரியின் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லை என்பது நிரூபணமாகிறது என்று எதிரி தரப்பில் வாதம் முன்

வைக்கப்பட்டது.

**9)** இந்த வழக்கில் தற்போது தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில், எதிரியின் மீதான சட்டப் பிரிவு 4(1)(C) TNP (Amendment) Act, 2024–ன் குற்றச்சாட்டு நியாயமான சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே தீர்வுக்குரிய சங்கதிகள் ஆகும்.

**<u>தீர்வு</u>**

10) இந்த வழக்கில் அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் சம்பவம் குறித்து நீதிமன்றம் நம்பத்தகுந்த வகையிலும், எவ்வித முரண்பாடுகள் இல்லாமலும், பொருண்மையை ஒரேவிதமாக குறிப்பிட்டு அமைய வேண்டும். அந்த வகையில் இவ்வழக்கின் சாட்சியங்கள் மேற்படி வகைமுறைகளுக்கு உட்பட்டு அமைந்திருக்கிறதா? என்பதே பரிசீலிக்கப்பட வேண்டும்.

**11) (i)** கடந்த 06.04.2025 ம் தேதி வி. களத்தூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் அ.சா.2 அசோகன், காவல்நிலைய காவலர்களான அ.சா.1 சுரேஷ் மற்றும் சுரேஷ்குமார் ஆகியோர் மது குற்றம் சார்ந்த ரோந்து சம்மந்தமாக மேட்டுபாளையம் பகுதியில் கண்காணிப்பு பணியில் இருந்தபோது சிறப்பு உதவி ஆய்வாளருக்கு கிடைத்த இரகசிய தகவலின் படி மேட்டுபாளையம் பகுதியில் கண்காணித்தபோது எதிரியிடம் சுமார் 180ML அளவுடன் கூடிய Black Pearl Brandy என்ற லேபிள் ஒட்டப்பட்டிருந்த 26 பாட்டில்கள் இருந்துள்ளது. மேற்படி மதுபான பாட்டில்களை மதுபான கடையில் சிறுக சிறுக வாங்கி டாஸ்மாக் கடை மூடிய பிறகு அதிக லாபத்திற்கு சில்லரையில் விற்பதற்காக வைத்திருந்ததாக எதிரி சொன்னதன் பேரில் எதிரியை உதவி ஆய்வாளர் கைது செய்துள்ளார். எதிரியிடமிருந்த மதுபான பாட்டில்களை தன்னுடன் வந்த காவல்நிலைய காவலர் அ.சா.1 மற்றும் பட்டியல் சாட்சி சுரேஷ்குமார் ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றியுள்ளார்.

**11)(ii)** மேலும் கைப்பற்றிய மதுபான பாட்டில்களில் உள்ள மதுவை அதே சாட்சிகள் முன்னிலையில் கீழே கொட்டி அழித்துள்ளார். கைபற்றுதல் மகஜர் மற்றும் அழித்தல் மகஜர் முறையே அ.சா.ஆ.1 மற்றும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்பு எதிரியை காவல் நிலையம் அழைத்து வந்து குற்ற எண்.44/2025, பிரிவு 4(1)(C) TNP (Amendment) Act, 2024–ன் படி உதவி ஆய்வாளர் அசோகன் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு

செய்யப்பட்டுள்ளது. பின்பு உதவி ஆய்வாளர் அ.சா.2 காவல்நிலைய காவலர் அ.சா.1 சுரேஷ் மற்றும் பட்டியல் சாட்சி சுரேஷ்குமார் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

12) மேலும் உதவி ஆய்வாளருடன் மது ரோந்துக்கு சென்ற காவல்நிலைய காவலரான சுரேஷ் என்பவர் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். மேற்படி அ.சா.1 தனது முதல் விசாரணையில் கடந்த 06.04.2025ம் தேதி மதுவிலக்கு தடுப்பு சம்மந்தமாக மேட்டுபாளையம் பகுதியில் சென்றுக்கொண்டிருந்போது உதவி ஆய்வாளருக்கு கிடைத்த ரகசிய தகவலின்படி எதிரியிடம் சுமார் 180ML அளவுடன் கூடிய Black Pearl Brandy என்ற லேபிள் ஒட்டப்பட்டிருந்த 26 இருந்தது குறித்தும் அவற்றை கைப்பற்றியது குறித்தும், உதவி ஆய்வாளர் தயார் செய்த கைப்பற்றுதல் மகஜரில் சாட்சி கையொப்பம் செய்தது குறித்தும், எதிரியை காவல் நிலையம் அழைத்து வந்து குற்ற எண்.44/2025ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி அ.சா.1ன் சாட்சியத்தை நன்கு பரிசீலனை செய்கையில், எதிரி மது பாட்டில்களை விற்பனைக்காக வைத்திருந்தார் என்று நிரூபணம் செய்யும் விதமாக சாட்சியம் அமையவில்லை.

13) மேலும் அ.சா.2 புலன் விசாரணை அதிகாரி எதிரியை மேட்டுபாளையம் பகுதியில் வைத்து கைது செய்து மதுபான பாட்டில்களை கைப்பற்றியுள்ளார். சட்ட விரோதமாக அரசு மதுபான பாட்டில்களை லாப நோக்கத்தோடு அதிக விலைக்கு விற்பனை செய்ய சிறுக சிறுக வாங்கி வைத்திருந்ததாக எதிரி தன்னிடம் சொன்னதாக புலன் விசாரணை அதிகாரி குறிப்பிட்டுள்ளார். மேற்படி அ.சா.2ன் சாட்சியத்தை நன்கு பரிசீலனை செய்கையில், புலன் விசாரணை அதிகாரி எதிரியிடமிருந்து வாக்குமூலமோ அல்லது ஒப்புதல் வாக்குமூலமோ பெறவில்லை. மேலும் தனிநபர் சாட்சிகள் யாரும் இவ்வழக்கில் அரசு தரப்பில் விசாரிக்கப்படவில்லை என்பதும் இந்நீதிமன்றத்திற்கு தெரிய வருகிறது. மேலும் மது பாட்டில்களை யாரிடம் விற்பனை செய்தார் என்பதை குறித்து சாட்சியம் அளிக்கவில்லை. எனவே, அ.சா.1, அ.சா.2 ஆகியோரின் சாட்சியம் அரசு தரப்பு வழக்கை நிருபணம் செய்யும் விதமாக அமையவில்லை.

14)மேலும் அ.சா.1 தனது முதல் விசாரணை சாட்சியத்தில் கைப்பற்றப்பட்ட மது பாட்டில்களை திறந்து மதுவை கீழே கொட்டி அழித்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

ஆனால் புலன் விசாரணை அதிகாரி கொட்டி அழிக்கப்பட்ட காலி மதுபாட்டில்களை இந்நீதிமன்றத்தில் வழக்குச் சொத்தாக தாக்கல் செய்யவில்லை. மதுபானங்களை கொட்டி அழித்ததை புகைப்படம் எடுத்து தாக்கல் செய்யவில்லை. மேலும், கைப்பற்றப்பட்ட பொருளை இச்சட்டத்தின் கீழ் மதுவிலக்கு அலுவலர் அல்லது காவல் ஆய்வாளர் நிலைக்கு கீழ் அல்லாத அலுவலர் முன்புதான் அழிக்கப்பட வேண்டுமென்றே கூறப்பட்டுள்ளது. மேற்படி தமிழ்நாடு மதுவிலக்கு சட்டம் பிரிவு 32(C) முறையாக பின்பற்றப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

15) மேலும் இந்த வழக்கில் புலன் விசாரணை அதிகாரி சம்பவ இடத்தை குறிக்கக்கூடிய பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்பதும் இந்நீதிமன்றத்திற்கு தெரிய வருகிறது.

16) மேலும் இந்த வழக்கில் புகார்தாரரும் புலன்விசாரணை அதிகாரி சிறப்பு உதவி ஆய்வாளர் ஆவார். மாண்புமிகு உச்சநீதிமன்றம் *Mohanlal Vs State of Punjab 2018 SCC Online 974* என்ற வழக்கில் புகார்தாரரும் புலன்விசாரணை அதிகாரியும் ஒருவராக இருக்கும் போது அந்த புலன்விசாரணை நம்பத் தகுந்ததாக இருக்காது, ஒருதலைபட்சமாக இருக்க வாய்ப்புள்ளது என்று தீர்ப்பு வழங்கியுள்ளது. மேற்படி முன் தீர்ப்பின் படியும் இந்த வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது. எனவே எதிரி மீதான சட்டப் பிரிவு 4(1)(C) TNP (Amendment) Act, 2024–ன் கீழான குற்றச்சாட்டை அரசு தரப்பில் நியாயமான சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லையென இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

17) மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில், அரசு தரப்பில் எதிரி மீதான பிரிவு 4(1)(C) தமிழ்நாடு மதுவிலக்கு சட்டத்தின் கீழ் குற்றவாளி அல்ல என இந்நீதிமன்றம் தீர்மானம் செய்கிறது.

18) இறுதியாக, எதிரியின் மீதான சட்டப் பிரிவு 4(1)(C) TNP (Amendment) Act, 2024–ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் தகுந்த சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலமாக நியாயமான சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று முடிவு செய்து, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து, எதிரி மேற்கூறிய பிரிவின் கீழான குற்றச்சாட்டின் கீழ் குற்றவாளி இல்லை என்று தீர்மானித்து, எதிரியை பாரதிய நாகரிச் சுரக்சா சன்ஹிதா பிரிவு 271(1)–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

19) எதிரி எழுதிக்கொடுத்த பிணைப்பத்திரம் இரத்து செய்யப்பட வேண்டும் என உத்தரவிடப்படுகிறது.

20) இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் ஏதும் இல்லை என்பதால், அது குறித்து உத்தரவு ஏதும் பிறப்பிக்கப்படவில்லை.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாகச்சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்த பின்னர் 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30ம் நாள் இந்நீதிமன்ற அவையறியப்பகரப்பட்டது.

ஒம்/- இரா. இராஜசேகரன்
(FAC)மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
வேப்பந்தட்டை.

<u>இணைப்பு</u>

<u>1. அரசு தரப்பில் விசாரித்துக்கொள்ளப்பட்ட சாட்சிகள்</u>

| | | |
|---|---|---|
| 1 | அ.சா.1 | திரு. சுரேஷ் (காவல்நிலைய காவலர்) |
| 2 | அ.சா.2 | திரு. அசோகன் ( உதவி ஆய்வாளர்) |

<u>2. அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட சான்றாவணங்கள்</u>

| | | |
|---|---|---|
| 1 | அ.த.சா.ஆ.1 | கைபற்றுதல் மகஜர் |
| 2 | அ.த.சா.ஆ.2 | அழித்தல் மகஜர் |
| 3 | அ.த.சா.ஆ.3 | முதல் தகவல் அறிக்கை |

அரசு தரப்பு சான்றுப்பொருட்கள் – இல்லை
எதிரி தரப்பு சாட்சி, சான்றாவணங்கள், சான்றுபொருட்கள் – இல்லை

ஒம்/- இரா. இராஜசேகரன்
(FAC)மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
வேப்பந்தட்டை.

குறிப்பு:-

1. வழக்கு முடிவு பற்றி போலீசாருக்கு தெரிவிக்கப்பட்டது.
2. எந்த சாட்சியும் 3 நாட்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை
3. வழக்கு விசாரணையின் போது எதிரி பிணையில் இருந்தார்.

Date :30.03.2026 DM cum JM, Veppanthattai

Particulars Under Rule 106 of Criminal Rules of Practice 2019
Description of the accused

| SNo. | Cr.No. | Name of the Police | Name of the accused | Father's name | Occupation | Residency | Age |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | 44/2025 | V. Kalathur PS | Muthammal | W/o. Periyasamy | Labourer | Mettupalaiyam Village, Veppanthattai | 63/2025 |

Date of

| Occurrence | complaint | Apprehension | Release on bail | Commitment | Commence of Trial | Close of trial | Sentence or order | Service of copy of Judgment on accused | Explanation of delay |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 06.04.2025 | 06.04.2025 | 07.04.2025 | 07.04.2025 | Not applicable | 24.03.2026 | 24.03.2026 | 26.03.2026 | - | No delay |

Judgment typed and Uploaded by Steno – Typist

Date :30.03.2026 DM cum JM, Veppanthattai